ஶ்ரீ

ராமஜெயம்.

# கல்யாணபோஜன

## சம்பிரதாயகும்மி.

கும்பகோணம்.

## சுப்பலெக்ஷிமி அம்மாள்

இயற்றியதை,

கும்பகோணம்.

புஸ்தகவியாபாரம்,

## ம. நாராயணசாமிபிள்ளை

அவர்கள் கேட்டுக்கொண்டபடி,

இவை.

## பு. முனிசாமிநாயுடு

அவர்களது,

சங்கநிதிவிளக்க அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

MADRAS.

ரிஜிஷ்டர்காப்பிரைட்.

1911.

# ரிஜிஸ்தர் அறிவிப்பு.

இந்தக் கல்யாணபோஜன சம்பிரதாயகும்மி, கும்பகோணம் சுப்பலெக்ஷிமி அம்மாள்செய்ததை, சுதந்தர பாத்தியதை வாங்கிக்கொண்டு கெவர்மெண்டில் ரிஜிஷ்டர் செய்திருப்பதால் இப்புத்தகத்தையாவது இப்புத்தகத்திலுள்ள பாகங்களில் எதையாவது என் அனுமதியன்றி யாராகிலும் அச்சிடத் துணிவீர்களாகில் எல்லாவித நஷ்டத்திற்கும் பினல்கோர்ட்டார்கேள்விக்கும் ஜவாப்தாரியாக வேண்டும்.

இப்படிக்கு.

**பு. முனிசாமிநாயுடு,**

சங்கநிதிவிளக்கம்பிரஸ்.

நெ. 32-அவதானம்பாப்பைய்யர் ரோட்

சூளேபோஷ்டு

சென்னப்பட்டணம்.

ஸ்ரீ

ராமஜெயம்.

# கல்யாணபோஜன சம்பிரதாய

# கும்மி.

## 1-வது கட்டம்.

ஐங்கரன்கிருபையாலே யென்றமெட்டு

கும்மி.

காராணைமுகததோனே கணபதியைபணிந்து
கல்யாணபோஜனத்தின் கும்மியதைதெரிந்து
சீராகபாடிடவே சிந்தைமகிழ்ந்து
செப்புகுரேன்இப்புவியில் யாவர்களும்புகழ்ந்து.

கருணையுள்ளசரஸ்வதி யென்கருத்திலிருப்பாயே
கல்யாணபோஜனத்தின் கும்மியருள்வாயே
பெருகியபூதலத்தில் குதித்துபாடநீயே
பிரியமுடன்வந்தெனக்கு அருள்புரிவாய்தாயே.

சுத்தமானமனதுடைய மங்கையரெல்லோரும்
சுகமாககூடிவந்து சுகந்தங்களுமணிந்து
பத்தரைமாற்றுதங்கபசும் பொன்னுடையுடுத்தி
பாதசரம்காப்புகொலுசு பாதமதிலணிந்து.

தண்டைசிலம்புஓசை சப்தங்களுமொலிக்க
சலங்கைகளின்தொனியதுவும் தானும்கலீரென்க
கொண்டல்போல்காலாழி பீலிகளும்நடிக்க
கோதையர்கள்ஒருவற் கொருவர்கூடிகளித்திருக்க.

தங்கஒட்டியானமது தையலர்கள்தரித்து
தகுதியானகாசிபனூர்சு புடவைகளுமுடுத்தி
யெங்கும்பிறகாசமான றவிக்கைகளுமணிந்து
யெழிலானவதனத்திற்கு கஸ்தூரிபொட்டுமிட்டு.

மின்னலிடையுடைய மேனகைபோல்மாதர்
மெல்லியநற்குழலுடைய கன்னியர்கள்கூடி
உன்னதமானவெகு ஆபரணமெடுத்து
உயர்வாகஅணிந்துகொண்டு வந்தார்களடுத்து.

சந்திரபிரபைசூரியபிரபை தையலர்கள்தரித்து
ஜடைநாகம்ஜடைபில்லை ஜடையதனில்வைத்து
சுந்தரமாய்ராக்கடிசூழ்ந்த திருகுபில்லை
சொகுசானகிளிதாழம்பு கொட்டைகளும்வைத்து.

பச்சையினால்செய்த நாகற்பாரிசடைகுச்சும்
பருதியைப்போல்பிரகாசிக்கும் சுட்டிபட்டம்வைத்து
வச்சிரகம்மல்ஜிமிக்கி வாளிமாட்டல்குருடு [ம்
வயிரங்களில்கமலங்களில் வைத்திழைத்தணிந்து.

மெச்சிகொள்ளும்முருகு மெள்ளசெவியில்பூட்டி
மேலானபச்சைகளில் செய்தமயிற்மாட்டி
நத்துமூக்குத்திபுலாக்கு நாசிதனிலிட்டு
நளினமானகெம்புகளில் செய்தபொட்டுமிட்டு.

முத்துபவழங்களும் மோகனமாலைகளும்
முதல்தரசெகப்புகளி னட்டிகையும்போட்டு [ன்
கிள்ளட்டிகைசரட்டட்டிகை கிடியாரபூரான்பொத்தா
உள்ளவயிரஅட்டிகைகள் உயர்ந்தசந்திரஹாரம்.

சரப்பளிஅஞ்சிகொத்து சறடுகள்தானணிந்து
கருகுகோதுமணிகள்காரை ஜெபசரமும்புனைந்து
பலவகையாபறணம் பாவையற்களெடுத்து
பாலாழிசங்கம்போன்ற கழுத்தினிலேதரித்து,

தங்ககாப்புசங்கிலிதோடா பாட்லிவங்கிமாட்டி
கங்கணங்கள்கதிர்வளையல் கரமதனில்போட்டு
பொங்கும்மின்னல்போன்ற இடையில்தங்ககுஞ்சமிட்
எங்கும்பிரகாசிக்கும்படி யாவர்களும்சேர்ந்து. [டு

அன்னம்போலேநடைநடந்து அனேகமாதர்நாடி
அவரவர்பதார்த்தங்களை யெடுத்துவந்துகூடி
உன்னதமானஇந்த காக்ஷியதைபார்க்க
உம்பர்கள்வானுலகில் கூடிகளித்திருக்க.

வந்திருக்கும்பிராமணரை வணக்கமுடனழைத்து
வரிசையாகவைத்துவாழை இலையதனைபோட்டு
செந்திருவாய்தொன்னைமுதல் பாத்திரங்களும்வைத்து
செவ்வையாககெங்காஜலம் யாவத்திலும்போட்டு.

தங்கபலகைபோட்டு தாழ்ந்துஉபசரித்து
தகுதியுள்ளபூஸுரரை தன்மையுடன்குரித்து
மங்குதலில்லாமல் உட்காரவைத்து
மாசபையில்யாவர்களு மகிக்ஷியாகஅடுத்து.

கங்காஜலங்களை கரங்களால்தெளித்து
கனகமயகெண்டிகளில் வாசனைஜலம்வைத்து
சிங்காரமாகவேதான் பதார்த்தங்களெடுத்து
சிரப்பாகயாவர்கட்கும் வைத்துவரகொடுத்து.

ஸ்ரீ கல்யாணபோஜன

## 2-வது கட்டம்.

மாப்பிள்ளைதானப்போவந்து யென்றமெட்டு.

பத்திபத்தியாய்வந்து பிராம்மணர்களிருக்க
பாங்குடனேஒவ்வொருவர் பதார்த்தங்களெடுக்க
இத்தனைவகையென் றியம்பிடலாகாதே
யெழிலானநளபாக மிதற்குஒவ்வாதே.

பசும்பொன்தட்டினிலவர் பதார்த்தங்களெடுத்து
பரிமாறிவருகின்ற பான்மையதைபார்த்து
விசும்பினில்தேவர்நின்று வேடிக்கைபார்த்த
விந்தையதைமொழிந்திட யெந்தனாலாமோ.

இக்குவலையமெங்கு மிதைப்போல்காணேனே.
அக்கரையுடன்கூடி சக்கரைபாயாசம்
பக்குவமானகக்கரிக்காய்கோஸ்மல்லி
வெள்ளேரிபிஞ்சில் செய்தவிதரணைகோஸ்மல்லி

தேங்காதயிற்சேர்த்த திரமானகோஸ்மல்லி
பாங்கானஇளம்வாழை தண்டுகோஸ்மல்லி
யெங்கும்கிடைக்காத பெலிமிச்சங்கோஸ்மல்லி
யெழிலாய்பச்சபயரு தேங்காய்கோஸ்மல்லி

கடலைகொப்பரைச்சேர்த்த கற்கண்டுகோஸ்மல்லி
கருதியமாம்பழ பிலாச்சுளைபச்சடி
உச்சிதமானவிளாம் பழங்கள்பச்சடி
உயர்ந்தநார்த்தம்பழம் உருதியாம்பச்சடி

இச்சிக்கும்வெண்டைக்காயில் வெல்லம்சேர்த்தபச்சடி
இசைவானபச்சைமிளகாய் கொடமிளகாய்பச்சடி

மெத்தஉயர்கூட்டு மாடாங்கரின்பச்சடி
மேன்மையானகொத் தவரைக்காய்றுயத்து

ஸ்வச்சமானபுடலம் பிஞ்சிராயத்து
கத்தரிககாய்கரணக் கிழங்குமவியல்கள்
உத்தமமானஉருளைகிழங்கு மவியலும்
உயர்ந்தபயத்தங்காயில் செய்தஉப்பேரியும்

மெத்தருஜியுள்ள வாழைக்காய்உப்பேரியும்
மேன்மையுள்ளவாசனைக் பிலாக்காபொடிக்கரி
பசுந்தானநிறமுள்ள பறங்கிக்காய்பொடிக்கரி
படர்ந்தபூசனிகொட்டை பிலாவின்மூஸகள்

ஆசையுள்ள அவரைபிஞ்சிதுவட்டலும்
அரைக்கீரைமுளைக்கீரை அதுவும்துவட்டலும்
பாசமதானஇன்னம் பற்பலவிதங்களும்
பந்தியில்வைத்துவரும் பதார்த்தமடங்களும்.

## 3 - வது கட்டம்

அண்ணாஇன்னம்வர கானேனே
யென்றமெட்டு.

இன்னம் அனேகவிதம்
இருக்குதே பதார்த்தங்கள்
எதுவொன்றும் விடாமலே
யெலையில்வைத்து வாருங்கள்

கன்னமமு தெனவே
கருத்தினிலே வையுங்கள்

கஞ்சமல ரஞ்சிதமே
காரிழையே கேளுங்கள்

அனேகம் கரிகள்சேர்த்த
அவியல்களை வையடி
அதிருஜியுள்ள பாற்காய்
கொம்புபாற்காய் பிட்டளைவையடி

வெண்ணிரமுள்ள வெண்டைக்கா
சாம்பார்வித விதமாவையடி
கன்னியரே கருதும்
கத்திரிக்காய் சாம்பார்வையடி

கருதும்சேப்பங் கிழங்குசேர்ந்த
மோர்க்குழம்பு வையுமே
காரிகையே ஆராமாத
கிரைதண்டு மோர்க்குழம்புமே

மருகியமனத்தங் கனிவத்தல்
மதுறமான குழம்புமே
ஒருவற்கும் விடாமலே
உருதியாக வையுமே

அவரைக்காய் வத்தல்சேர்த்த
ஆசையுள்ள குழம்பிது
அண்டிவந்தவர்கள் கேழ்க்கும்
வெண்டைக்கா குழம்பிது

சுண்டைக்காய் வத்தல்சேர்த்த
சுகமான குழம்பிது

சொகுசானகொத் தவரைக்காய்
வத்தல் குழம்பிது
பாகற்காய்வத்தல் சேர்த்த
பகுருஜியாங் குழம்பிது
பாரில்கிடைக்காத சுக்காம்
வத்தல் குழம்பிது

தேவற்கும் கிட்டாத
மாங்கொட்டை குழம்பிது
தேடிய துமட்டிக்காய்
வத்தல் குழம்பிது

மல்லியும் சேர்த்த
மைசூரின் ரசமிது
மதுரமான சீராமிளகு
காரமான ரசமிது

மெல்லிய பித்தம்நீக்கும்
வேப்பம்பூ ரசமிது
மேதினியில் வாயுவைபோக்கும்
கண்டதிப்பிலி ரசமிது

பருப்புகட்டு சேர்த்தவெகு
பசுந்தான ரசமிது
பலவிதவித மான
தொன்னைகளில் வைத்துமே

திருப்தியாக யெண்ணில்லாத
விப்பிறர்கள் தானுமே
தேவற்கட்கும் கிடைக்காத
திவ்வியபோஜன மாகுமே.

## 4 - வது கட்டம்.

மாமனார்சொல்லலுமே-யென்றமெட்டு.

அதிகருஜியுள்ள இந்த
ஆமோடே பருப்பும்
மதுரமாம் மசால்வடை
உளுத்தம்வடைகளும் தானும்வைத்து

காராவடைகளும் கருதிய
வாழைக்காய் பக்ஷிகளும்
சீரானகத்திரிக்காய் பக்ஷியும்
செவ்வைய தாய்வைத்து

பத்துதலுமுள்ள நல்ல
புத்துருக்கு நெய்யும்
குத்துசுற்குசம்பா அன்னங்களும்
கூசாமல் வைத்திடவே

சக்கரைபொங்கல் மிந்திரி
திராக்ஷா சேர்ந்ததுவே
பக்குவமாகிய பயத்தம்
பொங்களும் தானும்வைத்து

பருப்புகள் சேர்த்தவெகு
பழயநாள் பொங்கலுமே
விருப்பமுள்ள புளியோதரை
யெலுமிச்சம் பழோதரையும்

தேங்காய் சாதங்களும்
திவ்வியஉளுத்தங் சாதங்களும்
தேடிதிரிந்திடும் கேஸரிபாத்து
பாகாளபாத்தும் வைத்து

அக்கரைவடிசல் இன்னம்
அனேகவித பொங்கலும்
முக்கியமாகிய தாவல்யமுள்ள
அப்பளாம் சோத்துவடாம்

அரிசி அப்பளாம்
அதிகசவ்வரிசி அப்பளாம்
அவல்க்கரு வடாம்
மனேககூழு கருவடாமும்

சவ்வரிசிதன்னில் மிகவும்
சார்ந்தகரு வடாமும்
திவ்விய ருசியுள்ள
உன்னீதநேன்குழல்க் கருவடாமும்

பெருமைய தாயுள்ள
தானபேணிக் கருவடாமும்
அருமையுள்ள அனேககருவடாம்
வத்தல் தினிசுகளும்

இட்டலி தோசைகளும்
இன்னம்தேங்காய் கொழுக்கட்டையும்
மட்டிலடங்காபருப்பு கொழக்கட்டை
உளுத்தங்கொழக் கட்டையும்

தேங்காய் பூரணம்சேர்த்த
வெகுதிரமான போளிகளும்
பாங்குடன்றவா கற்கண்டுசேர்த்த
ரம்யமாம் போளிகளும்

பசுவின்பாலில் செய்த
பக்ஷந்தாகிய போளிகளும்
ருசியுள்ளவெல்ல வல்புளியவல்
மிளகவல் தயிறவலும்.

## 5-வது-கட்டம்.

இந்தவார்த்தை சொல்லனுமே
யென்றமெட்டு.

பருப்புதேங்காய்முன்வர பருப்புதேங்காய்
முருக்குவெல்லசீடை கோலவடையும்
தேங்கொழல்ஓமபொடி காராபூந்தியும்
திவ்வியசிலேப்பிபூந்தி அல்வாபருப்பியும்

குணமானநவாத்து கற்கண்டுமிட்டாய்கள்
குண்டுகுண்டான குஞ்சாலாடுகளும்
பெருமையுள்ளதாகிய பேசரிலாடும்
பிரீதிஅதிகந்தரும் சம்பங்கிலாடும்

நல்லநெய்தனில்செய்த ரவாலாடுகளும்
நலமுள்ளதானவெகு பயத்தங்காலாடும்
மாண்டேபேண்டை கூழோரைபேணி
மகிக்ஷியாம்பதற் ப்பேணிமுதலியதும்

ஸொஜியப்பம்சின்ன ப்பங்களுமே
சுகியன்முதலியதும் தானுமேவைத்து
திங்கதிகட்டாதேன் சேர்த்ததிறட்டுபால்
திரிலோகமதிக்கும் மைசூருபாத்தும்

பங்காளங்களில்செய்யும் குலாப்பூஜாம்பூன்
பார்க்கவெகுஅழகாய் இருக்குதுபார்
பசும்பாலில்செய்யுகின்ற தூதுபேடா
பன்னீர்லட்டுகளுமே பாங்குடன்வைத்து

பூவன்பச்சநாடன் றஸ்தாளியும்
புகழும்மொந்தன்பழம் தேன்கதலியும்
மலையில்விளைந்துவரும் மலைப்பழமும்
மாசில்லாதஒட்டு மாம்பழபிலாச்சுளையும்

## 6 வது கட்டம்.

அண்ணு இன்னம்வறக்காணேனே
யென்றமெட்டு.

பாயசம் வகையதனை
பார்த்தெடுத்து வையடி
பகுருசியுள்ள சோமா
பாயசமும் பாரடி

சகலற்கட்கும் றம்மியமாம்
சவ்வரிசி பாயசம்
நல்லதினி சானறவா
பாயசங்களும் போடடி

நலமான பச்சபருப்பு
நயமான பாயசம்
பலதினிசான இந்த
பாயசங்களை வைய்யுங்கள்

முனைமுரியா திணையரிசியில்
செய்ததிவ் வியபாயசம்
முன்னோர்கள் அரைத்திட்ட
வேப்பிலை கட்டியும்

அதிகமிக் காரமுள்ள
மிளகாய் பொடிகளும்
ஆசையுள்ள பச்சமிளகாய்
ஊசிமிளகாய் தொக்குமே

பச்சமிள காய்சேர்த்த
தேங்கா துகையலும்
இச்சிக்கும் மாவடு
புளிஇஞ்சி யெலுமிச்சையும்

நாரத்தை கிடாரங்காய்
ஜாதிநாரத்தை கிளாக்காய்களும்

நல்லயெண்ணெகள் சேர்த்த
நலமானஊர் காய்களும்
மனமகிழ்ந் தருந்துகின்ற
மாங்காய்ஊர் காய்களும்
இனமாக யெவவளஒ
ஊர்காய் களிருக்குதே
ஆடையெடுக் காதவடை
தயிற் களும்
வாடைகள் வீசும்படி
வரிசையாக வையுங்கள்
யெலுமிச்சம் பழம்சுக்கு
கருகப்பிலே பாகமும்
யெல்லாவத் தையும்சேர்த்த
பன்னியநீர் மோரையும்
உல்லாசமாக யெல்லோ
ரிடங்களிலும் வையுங்கள்
சித்தாள பாதாள
பச்சகர்ப் பூரங்கள்
சேர்த்தபரி மளமிகுந்த
கெங்கா மிர்தத்தை
பார்த்துஒவ் ஒருவருக்கும்
பரமதகண்யற் வைத்திட
சம்பிரமமாய் யாவர்களும்
சாப்பிட் டெழுந்தபின்
அங்கவற்கு காவேரி
ஜலமன்புடன் கொடுத்திட
அங்கங்களை அவரவர்கள்
சுத்திசெய்து வந்தபின்
தங்கமயமான ரெத்தின
கம்பளி மீதினில்

சந்தனம்புஷ்ப தாம்பூலம்
சகலற்கட்கும் கொடுத்திட
ஜவ்வாதுபுனுகு பன்னீர்
தந்துவிடை யளித்திட

செப்பிய போஜன
கும்மிஇது தானும்
ஜெகமீதினில் குதித்து
பாடிடவே வேணும்

எப்போதும் இப்புவியில்
வாழ்ந்திடவே தானும்
யெல்லோரும் மங்களங்கள்
பாடிடவே வேணும்.

யெத்தனையோதபசிபண்ணி பெற்றெடுத்பெண்ணே

யென்றமெட்டு.

எங்காத்துக் காரர்போன
தெவ்விடமோ அரியேன்
இளங்கொடி யெங்கள்
கன்னிகைக்கி வரநமைக்கத்தானே

உத்யோகமத ற்குளிவு
யெடுத்துகொண்டு தானே
ஊரெங்கினும் தேடிகொண்டு
வருகுராரவர் மானே

இத்தனை காலமாக
வரன்கிடைக்க வில்லை
யென்றுமன தியங்கியவ
ரெவ்விடம் போனுரோ

அடுத்தாத்து பெண்களுடன்
அரிவித்திருக் கையிலே
அப்போதொரு குடுகுடுப்பைக்
காரனும் வந்தானே

கம்பளத்தானே யெந்தன்
கருத்திலிருப் பதனை
கண்டுசொல்ல வேணுமேநீ
கணத்தினிலே தானே

ஜெயம்பலுக ஜெயம்பலுக
வேணுமடி அம்மா
தேடிகுறிசொ ல்லிடுவாய்
கொட்டியத்தாளே சும்மா

உம்பளத்துடன் விளங்கும்
கம்பளத் தாளே
உரைத்தகுறி இப்பொழுது
சொல்லிடுவாய் தாயே

யெல்லவற்கும் வரமளிக்கும்
வல்லபையே மாரி
நல்வாக்கு சொல்லடிஇந்த
அம்மாளுக்கு நீயே

தெக்ஷணத்தில் கெவுளி
பலுக்குதுபலுக்கு துனக்கு
ஷெணநேரத்தில் வருகிதுபார்
நல்லசேதி தணக்கு

ஈசானதிக்கி லிருந்து
சம்பந்தியும் நேராய்
இப்போது வந்திடுவாள்
இவ்விடத்தில் பாராய்

சுக்கிரதெசை உனக்கு
வருகிறது அம்மா
சுருக்காக பழயவஸ்திர
மன்னமளித் திடுவாய்

அண்ணுவும் சம்மந்தியுட்
னப்போது வந்தாளே
அனவர்களும் போஜனங்க
ளருந்தி இருந்தாரே

## யவ்வைபீயே யானுலென்ன யென்ற பரியாசகும்மி.

அதுவும்சொல் லுவாளவ
ளனேகம் சொல்லுவ
ளவல்மீதில்குற்ற மென்னடி
சம்மந்தியம்மா ளவள்மீதில்
குற்றமென்னடி சம்பந்தியம்மாள்(அது)

எதுவுமில்லாத வள்க்கு
யெதிர்ஜாமீனுங் கொடுத்து
மதுரமாம்க்ஷயத்துடன் மகிழ்ந்தளித்தும்
மதுரமாம்பக்ஷி யத்துடன்
மகிழ்ந் தளித்தும்(அது)

துட்டுப்பொரா புடவை
அரைக்கிஉடுத்தி கொண்டு
கட்டுக்காவ லில்லாதவ
ளவளம்மா கட்டுக்காவ
லில்லாதவளவ ளம்மா(அது)

கொட்டிலினில் கட்டிருந்த
மட்டிலாப் பசுக்கள்பாலே
யெட்டியெட்டித் தான்குடித்து
சம்மந்தியம்மாள் யெட்டிவாங்கி
தான்குடித்து சம்மந்தியம்மாள்(அது)

மட்டில்லாஜரிகை சேர்ந்த
பட்டாடை நவுக்கைமுதல்

துட்டுசெலவில்லாமலே வாங்கியுடுத்தி
துட்டுசெல வில்லாமலே
சம்மந்தி யம்மாள் (அது)

கோத்திர மரிந்து-சத்
பாத்திரத்தில் பெண்ணை தந்து
பாத்திரங்கள்பொன்னிநாற்செய்த-சகலவித
பாத்திரங்கள் வாங்கிகொண்டு
சம்மந்தி யம்மாள் (அது)

ஆடை கிழியவே
அன்னங்கள் தான்புஜித்து
கூடைகள் நிறயபின்னும்
கொண்டுபோனாளே கூடைகள்நிரைய
பின்னும்கொண்டு போனாளே (அது)

பலபலபக்ஷி யங்கள்
பாக்குவெத்திலே பாத்திரங்கள்
சிலசிலதெடுத்து கொண்டு
போனவளும் சிலசில
தெடுத்துகொண்டு போனவளும் (அது)

ஊர்கோலகும்மி.

அகிலமீதிலிந்த ஊர்கோல
அலங்காரங்களை குறித்தே
அந்ததிவ்விய ரதத்தை
மொழக்கத்துடன் விபரமாக
மொழியக்கேளு பெண்ணே

உச்சிதமான தங்கங்களில்
உயர்ந்தசக்கரம் வார்த்து
வச்சிரஅச்சுகள் சேர்த்து
பச்சைகளில்செய்த கீழ்ச்சட்டம்
பல்கைகளை கோர்த்து

பவழங்களில் செய்தமிக
பாரிகால்கள் நாட்டி
யேரிவிட்டங்கள் பூட்டி
நவரத்னமயமேல் சட்டத்தை
நாலுபுரத்திலு மாட்டி

சுவர்ணபலகைமேல் கொடுங்கைக்கி
சொகுசாகவே தைத்து
பாரிஜன்னல்கள் அமைத்து
நிர்ணயமாய்உள்ள சித்திரத்தை
நிம்மதியாய் அமைத்து

கந்தம்மல்லிகை முல்லைமரு
கஸ்தூரிமலரை பார்த்து
கட்டிவாசலில் சேர்த்து
அந்தமானகொடுங் கைதன்னில்
அசையாமலே கோர்த்து

சுத்துபுரத்தில் பவழரத்ன
முத்துமாலையை ஒட்டி
ரசகுடுக்கை யைகிட்டி
சுத்தமாக் அசைஞ்சாடு
மாலைசுத்தி அந்தமாய்கட்டி

அந்தமான ரத்னபீடத்தை
அதின்நடுவில் அமைத்து
அசுமான கிரிசமைத்து
விந்தையான ஜாலர்களை
வேண்டியமட்டிலே தைத்து

ரம்பாஸ்த்தம்பங்க ளெடுத்து
ரம்மியமாக ஒயர்த்தி
ஓவென்றுசொல்லி னிருத்தி
பம்பரம்போல் முத்துகுஞ்சம்
பலதோரணங்க ளிருத்தி

மேலான அஸ்வங்களை
மெள்ளகொண்டு போய்கட்ட
மேதினியெங் கினுமுட்ட
கால்களில்தண்டை துவனிக்க
கேட்டுகலந்து ஜனங்கள்கிட்ட

பளீர்பளீர் யென்றகாந்தி
உள்ளரதத்தின் மேலே
மெள்ளஅழ காய்பாலே
கலீரென்றுமெட் டிகள்தொனிக்க
கனகாங்கிவைத் தாள்காலே

அதர்வெடிகளை ஓடனுக்கொடனே
அநேகவித மாய்போட
அவைகள் சப்த்தங்களோட
சதிர்கள்செய்து ரம்பை
ஊர்வசிசரச மாகவேஆட

அந்தமான சாமரங்களை
அழகுகன்னியர் கள்போட
அந்தணர் முதலோர்கூட
மந்தமாகரதம் வறகண்டு
மகிழ்ந்தெல்லோர் களும்நாட

சந்தனபுஷ்ப்ப விடயங்களை
சகலருக்கு மளிக்க
பன்னீர்களை தெளிக்க
அந்தங்களைபார்த் தெல்லோரும்
அதிசயித்து களிக்க

நாகசரவாத் யங்களை
நானாவிதமாய் கோஷிக்க
நன்றாய்கேட்டு பூஷிக்க
நாககின்னரர் மலர்கள்தூவ
நங்கையர் சந்தோஷிக்க

ஆனைகுதிரை ஒட்டகமேல்
அம்பாரிபாவட் டாகட்ட
அதுஆகாசத் தில்முட்ட
சேனைத்தலைவர்களுடன் சிப்பாய்கள்
சேர்ந்துபத்தி யாய்கிட்ட

கணக்கில்லாத தீவட்டிகளை
கரத்தில்தூக்கி யெடுக்க
கைதீவட்டிகள் பிடிக்க
யிணங்கிக்கொருவர் கொருவர்ஒழுங்காய்
இருபுரத்திலும் நடக்க

பச்சைசெகப்பு வூதாமத்தாப்பை
பளபளவென்று போட
சீரிவாணங் கள்ஒட
கச்சிதமான பட்வாணங்கள்
கலந்துஆகா சம்கூட

ஆரத்தியை வீடுகள்தோரும்
ஆவலாக முன்அடுக்க
ஆசையாய் வந்துயெடுக்க
பார்த்தவரவர் வெத்திலைப்பழம்
பக்ஷியம்தட்டில் கொடுக்க

அரமனையின் முகதுவாரத்தில்
அழகாய்ரதம் வந்ததும்
பாவையரஸ்தம் தந்ததும்
காங்களைமெள்ள பிடித்துக்கொண்டு
கனகாங்கி எறங்கினதும்

தாவிவந்துபன்னீர் தெளித்து
தேங்காய் விடயம்கொடுக்க
ஆரத்தியை யெடுக்க
மேவிகுதித்து தாசிகள்வந்து
மெள்ளபாட்டு படிக்க

நேத்தியான சபைவந்ததும்
நியமனத்தை முடுக்கி
நிற்மலதீபத்தை அடுக்கி
எத்திஎறக்குதல் முதலிய
தெல்லாம் கிரம்படிக்கி

மங்கையரை உக்காரச்சொல்லி
மகிக்ஷியா போதிக்க
தங்கயெலே சாதிக்க
பொங்கல்முதல் யெல்லோருடன்
பங்கஜவல்லி அம்லிக்க

சகலருக்கும் மரியாதைகளை
சிரத்தையுடனே யளிக்க
பன்னீர்களை தெளிக்க
சுகமாஊர் கோலகும்மியை
சொகுசுடனே படிக்க

---

வரலெக்ஷிமியைஅழைத்தல் சாவேரிராகத்திலும்,

புன்னுகவராளியிலும்பாடலாம்-ரூபகம்,

---

ஜெயமங்களம் நித்தியசுபமங்களம்,

வரலெட்சிமியானநீ அஷ்டமாதர்களுடன்
வரிசையாகவேவந்து எங்கள்கிரகத்தில்
திரமானவாழைகள் தோரணங்கட்டிய
திவ்வியசபைவரவேணும் தீனரெக்ஷகி(ஜெ)

ஆசனபல்கையில் மாக்கோலங்களிட்டு
அழகுபிச்சோலே விளகுருகமணிகள்
வாஸனைவஸ்த்துவுடன் அலங்கரித்தகலசத்தில்
வந்தெழுந்தருளுமம்மா வாரிஜாக்ஷி (ஜெ)

நாகசரம்தாளம்தவில் பேரிநகராக்களை
நலமாகசங்கத்துடன் கோஷிக்கின்றார்
நாகரீகமான வீணை பிடில்ஸரபத்தை
நயமாகவாசிக்கின்றார் நீரஜாக்ஷி(ஜெ)

குங்குமம்ஜவ்வாதுமஞ்சள்கள் பாதங்களில்பூசி
குச்சிலிபொட்டுமிட்டு சந்தனங்களைபூசி
சங்குகண்டந்தனில் கந்தமலர்ஹாரத்தை
சிரத்தையாய்போத்துகுரோம் சர்வஜாக்ஷி(ஜெ)

மல்லிகைகஸ்தூரி முல்லைமருவெட்டிவேர்
மருக்கொழுந்துசம்பங்கி ஜாதிமலரை
அல்லும்பகலிலுமுந்தன் பாதங்களில்பணிந்து
அர்ச்சனைசெய்குரோம் அம்புஜாட்சி(ஜெ)

தீபங்கள்தூபங்கள் ஊதுவத்திஹாரத்திகள்
திவ்வியபலபட்சிய தாம்பூலம்தந்தோம்
பாபங்களைதீர்த்து பக்தர்கள்யாவரையும்
பாலிக்கவேணுமம்மா பங்கஜாட்சி(ஜெ)

சந்தானசம்பத்து சகலபாக்யங்களையும்
சந்தோஷகரமாக யெங்களுக்கு
இந்தாவென்றளித்துநீ இரக்கத்துடன்ரக்ஷிப்பாய்
ஈஸ்வரிகஞ்சதளாய தாட்சி(ஜெ)

சாரட்டில்யென்கணவன் சந்தோஷமாய்ஏரி
போரட்டுமெம்பர்களில் போய்விளங்கி
கோரட்டுநீதிபோல் நியாயங்களைபேசிவர
ஏரிட்டுப்பாருமம்மா வாரிஜாட்சி(ஜெ)

அஸ்வத்தின்மேலேரி அழகாகயென்புருஷன்
அரமனையில் ஸ்ரீஜனற்தாஸனத்தில்

# கல்யாணபோஜனசம்பிரதாயகும்மி.

விஸ்வாஸமாகவே வீற்றிருந்துவரும்படி
வீட்சிக்கவேணும் விசாலாக்ஷிஅம்மா(ஜெ)

மச்சினன்மாமியார் மாமனார்முதலோர்கள்
மனங்குளிர ரெத்னங்களாலிழைத்த
கச்சிதபல்லக்கில் வீற்றிருந்துவரும்படி
கடைக்கண்ணால்பாரு கருணாகடாக்ஷி(ஜெ)

தங்கமயகிண்ணிகளில் க்ஷீரஅன்னங்களெடுத்து
தருணத்தில்பாலர்களுக் கெடுத்தூட்டி
அங்குவந்தபேர்களுக்கு தங்குதடையில்லாமல்
அமுதளிக்கவரங்கொடுப்பாய் அம்புஜாட்சி(ஜெ)

அலங்காரகன்னிகா தானங்களைச்செய்து
அன்புடன்சம்மந்தி மார்கள்மனது
கலங்காமல்வஸ்திர பூஷணங்களையளிக்கவும்
கருணையுடன்பாரு கமலாட்சிஅம்மா(ஜெ)

போஜனசம்பிரதாயகும்மி
ஸம்பூரணம்.